**களுத்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 12 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்கச் ஷ சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதன செலவினம் ரூபா 44,800,948 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 44,633,154 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மூலதன செலவினம் ரூபா 167,794 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 42,133 தொகையான வட்டி வருமானம் ஆண்டின் வருமனமாக கணக்கீடு செய்யப்படாமல் முற்பணமாகப் பெற்ற வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய உறுப்பினர் படிகள், ஆதனக் கடன் வட்டி, சம்பளம் மற்றும் வீதி விளக்கு பராமரிப்பு மானியங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 16,881,296 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,198,892 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலுவை வருமானம் ரூபா 682,404 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்து விற்பனையிலிருந்து ரூபா 7,185 தொகையான வருமானமொன்று கிடைத்திருந்த போதும் அது வருமானச் செலவினக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குரிய வட்டி ரூபா 428,648 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 417,554 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டிற்குரிய வட்டித் தொகை ரூபா 11.094 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.3.2 **இணங்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

(அ) செலவினப் பேரேட்டின் பிரகாரம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்களின் கொள்வனவு ரூபா 125,000 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 164,458 ஆக இருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களின் மீதி ரூபா 26,519,510 ஆகவும் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 22,269,639 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,249,871 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

2.2.3 **முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 வரையில் 2015 ஆம் ஆண்டிற்குரிய முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் ரூபா 240,015 தொகையினை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,476,359 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,971,769 ஆக இருந்தது.

2.2 **வருமான நிர்வாகம்**

2.2.1 **நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 5,741,430 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **ஆதனவரி**

(i) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி பற்றுச்சீட்டிடப்பட்ட வரி வருமானம் ரூபா 8,619,459 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 6,016,951 தொகை அதாவது 70 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 5,668,985 நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 2,653,720 தொகை அதாவது 47 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

2.2.4 **காணி விற்பனையின் அடிப்படையிலான வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணி ஏல விற்பனை செய்யும் போது ஏலமிடப்பட்டு பெறப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் ஒரு சதவீத வருமானமொன்று சபையினால் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாது சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரினால் தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டில் ஒரு சதவீதமான தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டிற்கும் சந்தை விற்பனைப் பெறுமதிக்கும்

இடையேயுள்ள வேறுபாட்டைச் சீராக்க மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 விளம்பர பதாதைக் கட்டணம்

இலங்கைக் குடியரசின் 2014 திசெம்பர் 12 ஆந் திகதிய 1893 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டணம் அறவிட வேண்டிய 34 விளம்பர அறிவித்தல் பெயர்ப்பலகைகளுக்காக ரூபா 77,665 தொகையினை அறவிடுவதங்கு சபை நடவடிக்கை எடுத்திரக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 111,972,112 தொகையானது கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கிடைக்கவேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 52,809,684 |
| முத்திரைக் கட்டணம் | 59,162,428 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சேவையை விட்டுச் சென்ற இடமாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற 11 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 386,755 தொகையான கடன் மீதி வழங்கப்பட்ட ரூபா 386,755 தொகையான கடன் மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த ரூபா 366,008 கூட்டுத்தொகையான 05 காசோலைகள் 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதும் அது தொடர்பாக தொடர்புடைய நிதியப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஒ) ஆம் பிரிவின் பிரகாரம் சமய, புணர்ணிய கரும, கலாசார, சுகாதார, களியாட்ட அல்லது கல்விசார் பணிகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற செலவினம் ஒரு வருடத்திற்கு கூட்டு மொத்தமாக ரூபா 1,000 இற்கு மேற்படுமாயின் அதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டில் ரூபா 97,000 தொகை ஐக்கிய இலங்கை அறநெறிப் பாடசாலை மாணவர் திறன் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக அடிப்படை அமைப்புக்களுக்காக நேரடியாக ஒப்பந்தங்கள் கையளிக்கும் போது உரிய சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் 03 ஒப்பந்தங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஒரே

காலப்பகுதியில் ஈடூட முடியாதிருந்த போதிலும், அதற்கு முரணாக ஒரே காலப்பகுதியில் 02 சங்கங்களினால் 04 இற்கும் 07 இற்கும் இடையிலான எண்ணிக்கையில் ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்தனர்.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்